**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4274

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.08.2021

Accepted: 23.09.2021

Published: 01.10.2021

Citation:
Suba, T., and K. AJI. "Solutions to Problems in Learning Tamil." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 105–09.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4274

*Corresponding Author:
subabennet40@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Solutions to Problems in Learning Tamil

**T. Suba**
*Reg.no: 20123014022016*
*Research Scholar, Department of Tamil*
*Annai Velankanni College, Tholayavattam, Nagarcoil, Tamil Nadu, India*

**Dr. K . AJI**
*Assistant Professor, Department of Tamil*
*Annai Velankanni College, Tholayavattam*
*Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India*

**Abstract -** This review presents the problems that arise when learning Tamil and the solutions for it, which is our mother tongue, and which has been a virgin language for a long time. Solutions to problems in learning can be found through oral training and error free writing training. Oral training should be given through different and flexible exercises. The speech of the linguist should be an example to eliminate the shortcomings of unedited speech. The difference in the duration of the writing of the characters and the place of birth of a word should be clearly stated through individual training and group training. Writing training plays an important role in providing error & free writing training. Being able to write without error is made possible by clear pronunciation, oral reading, relaxed writing, checking what is written, knowing the rules of grammar etc.

**Keywords:** Oral practice, Tongue twisters, Tongue loosening, Written exercise, Traditional words.

**References**

1. Kovintharasan, M. (1993). *Nattamil Pyttalin Nokkamum Murayum*, Chennai, Sarasvathi Publication, .
2. Ilankkumaranaar, R. (2004). *Pilai Illamal Eluthuvom*. Chennai, Student Publication

# தமிழ் கற்றலில் உள்ள சிக்கல்களுக்கான தீர்வுகள்

*தா. சுபா*
பதிவு எண் : 20123014022016
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
அன்னை வேளாங்கன்னி கல்லூரி, தொலையாவட்டம், நாகர் கோவில், தமிழ் நாடு, இந்தியா

*முனைவர் டு. அஜி*
உதவிப் பேராசிரியர்,தமிழாய்வு மையம்,
அன்னை வேளாங்கன்னி கல்லூரி, தொலையாவட்டம்,
மனோான்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ் நாடு, இந்தியா

**ஆய்வுச் சுருக்கம்**

*காலம் பல கடந்தும் கன்னித் தமிழாக வீற்றிருக்கும் நம் தாய் மொழியாகிய தமிழைக் கற்கும் போது ஏற்படும் சிக்கல்கள் பற்றியும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகள் பற்றியும் இவ்வாய்வு முன்வைக்கிறது. வாய்மொழிப் பயிற்சி அளிப்பதன் மூலமும் பிழையின்றி எழுதப் பயிற்சி அளிப்பதன் மூலமும் சிக்கல்களுக்கான தீர்வுகளைக் காண முடிகின்றது. வாய்மொழிப் பயிற்சி அளித்தலில் நா பிறழ் பயிற்சிகளும் நா நெகிழ் பயிற்சிகளும் கொடுக்கப்படவேண்டும். திருத்தமில்லாப் பேச்சின் குறைகளைக் களைய மொழியாசிரியரின் பேச்சு எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும். தனிப் பயிற்சி மற்றும் குழுப் பயிற்சி மூலம் எழுத்துகள் ஒலிக்கும் கால அளவு வேறுபாடு, பிறக்கும் இடங்கள் இவற்றைத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிழையின்றி எழுதப் பயிற்சி அளித்தலில் எழுத்துப் பயிற்சி முக்கியப் பங்காகும். தெளிவான உச்சரிப்பு, வாய்விட்டு படித்தல், நிதானமாக எழுதுதல், எழுதியதைச் சரிபார்த்தல், இலக்கண விதிகளை அறிதல் போன்றவற்றின் மூலம் பிழையின்றி எழுத முடிகிறது.*

***முக்கியச்சொற்கள்:*** *வாய்மொழிப் பயிற்சி, நா பிறழ் பயிற்சி, நா நெகிழ் பயிற்சி, எழுத்துப் பயிற்சி, மரபுச் சொற்கள்.*

## முன்னுரை

செம்மொழியாகிய நம் தமிழ் மொழி. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி மக்களாகிய தமிழர்கள் பேசிய மொழி. அத்தகு சிறப்பு வாய்ந்த நம் தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்கும்போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அச்சிக்கல்கள் பற்றியும் அச்சிக்கல்களுக்கான தீர்வுகளைப் பற்றியும் இவ் ஆய்வு எடுத்துரைக்கின்றது.

## சிக்கல்களுக்கான தீர்வுகள்

வாய்மொழிப் பயிற்சியளித்தல் மற்றும் பிழையின்றி எழுதப் பயிற்சியளித்தல் மூலம் தமிழ் கற்றலில் உள்ள சிக்கல்களைத் தீர்க்கலாம்.

## வாய்மொழிப் பயிற்சியளித்தல்

கதை சொல்லல், வாசிக்கச் செய்தல், உரையாடுதல், நடிக்கச் செய்தல், பாடச்செய்தல் போன்றவற்றில் பயிற்சியளிப்பதன் மூலம் தெளிவான உச்சரிப்பு, இலக்கணப் பிழையின்மை, உணர்ச்சி வெளியிடும்

குரல், சொல் தொகுப்பு வளர்ச்சி போன்றவற்றைத் திருத்தம் செய்ய முடியும். திருத்தமான உச்சரிப்புக்கு நா பிறழ் பயிற்சிகள், நா நெகிழ் பயிற்சிகள் கொடுக்கப்பட வேண்டும்.

### நா பிறழ் பயிற்சிகள்

ல - ள - ழ, ந - ன - ண, ர - ற போன்ற எழுத்துகளின் ஒலிகள் ஒரே போல் உள்ளன. இதனை மயங்கொலிகள் என்கிறோம். இதனைத் திருத்த வாய்மொழிப் பயிற்சிகள் வழங்க வேண்டும்.

**(எ.கா) "ஓடும் நரிகளில் ஒரு நரி கிழ நரி**
**கிழ நரி முதுகினில் ஒரு படி நரை மயிர்"**
**"கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்**
**"மலை மேல் மழை பெய்தது"**
**"அவள் அவல் தின்றாள்"**

போன்ற ஒத்த ஓசையுடைய சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பயிற்சி தந்தால் நாக்கு பிறழ்ந்து நன்கு திருத்தமுறும்.

### நா நெகிழ் பயிற்சிகள்

ஒரே வகையான சொற்களை, ஒலிகளைப் பல முறை கூறுவது நா நெகிழ் பயிற்சியாகும். இதனால் நாவின் நுனி மேலும் கீழுமாக அமைந்து ஒலிப்பு முறை திருத்தம் அடைகின்றது.

ர , ர ,ர ,ர ,ரா, ரா ற , ற , ற , றா, றா
றி , றி, றி , றி ,றீ, றீ லி , லி , லி , லி , லீ , லீ
ழ , ழ , ழ , ழ , ழா,ழா னி, னி , னி , னி, னீ, னீ

என்பன போன்ற ஒலிகளை ஏதேனும் ஒரு இராகத்தில் மேலேற்றியும் கீழிறக்கியும் ஒலிப்பதன் மூலம் திருத்தம் செய்யமுடியும்.

திருத்தமில்லாப் பேச்சின் குறைகளை நீக்கும் வழிமுறைகள்

1. மொழியாசிரியரின் பேச்சு எடுத்துக் காட்டாக இருத்தல்
2. மாணவர்களின் பேச்சில் காணப்படும் குறைகளைத் திருத்தும் போது அவர்கள் மனம் பாதிக்காத வண்ணம் திருத்தல்
3. தொண்டைச் சதை, மூக்கடைப்பு போன்ற வியாதிகள் இருந்தால் பெற்றோரை அணுகி மருத்துவரிடம் செல்ல ஆலோசனை வழங்கல்
4. தனிப்பயிற்சி மற்றும் குழுப்பயிற்சி மூலம் ஒலிப்பிழைகளைத் திருத்தல்
5. "உன்னால் முடியும்" என்னும் தன்னம்பிக்கை உணர்வை ஊட்டடல்
6. அச்சம், கூச்சம் மிகுந்த மாணவர்களைக் கண்டறிந்து, அதைப் போக்குவதற்குப் பயிற்சிகள் வழங்கல்
7. ஈற்றெழுத்துகளை விழுங்காமலும் திரிக்காமலும் திருத்தமாக ஒலிக்குமாறு சொல்லிக் கொடுத்தல்
8. ரகர - றகர , நகர - னகர - ணகர, லகர - ழகர - ளகர எழுத்துச் சொற்களை ஒலிக்கும் போது ஏற்படும் பொருள் வேறுபாட்டை உணரச்செய்தல் (கரை - நீர் நிலைகளின் ஓரம், கறை - அழுக்கு; அன்னம் - பறவை, அண்ணம் - மேல் வாய்; அலை - கடலலை, அழை - கூப்பிடு, அளை - புற்று )
9. நகர, ணகர, னகரங்கள் முறையே அவற்றின் இனவெழுத்தாகிய தகர , டகர, றகரங்களோடு சேர்ந்து வருவதை உணர்த்தல்(எ .கா ) பந்து , பண்டம் , நன்று.
10. பிறக்குமிடங்களைச் சொல்லிக் கொடுத்து ஒலிக்கச்செய்தல்
11. குறில் - நெடில் வேறுபாடறிய எழுத்து கள் ஒலிக்கும் கால அளவைச் சொல்லிக் கொடுத்தல்

### பிழையின்றி எழுதப் பயிற்சியளித்தல்

மாணவர்கள் நற்றமிழைக் கற்கும் போது சிக்கல் எழாமல் இருக்க வேண்டுமென்றால் பிழையின்றி எழுதப் பயிற்சியளித்தல் வேண்டும். மாணவர்கள் சிறு வயது முதல் எழுத்துப் பயிற்சியினை மேற்கொண்டால் பிழையில்லாமல் தெளிவாக எழுத முடியும். எழுத்துப்பிழை ஏற்படுவதற்குப் பல

காரணங்கள் உண்டு . அவை

1. வாய்விட்டுப் படிக்காமை
2. தெளிவாக உச்சரிக்காமை
3. எழுத்துக் கூட்டிப் படிக்காமை
4. பொருளறிந்து சொல்லைப் படியாமை
5. அக்கறை இல்லாமை
6. திரும்பத் திரும்ப எழுதிப் பார்க்காமை
7. எழுதியதை மீண்டும் சரிபாராமை
8. நிதானமாக எழுதாமை
9. குறில், நெடில் வேறுபாடு அறியாமை
10. இலக்கண விதி முறைகளை அறியாமை
11. பிழைகளை நீக்கும் வழிமுறைகள்
12. வல்லினம் மிகுமிடங்கள், மிகா இடங்கள் சொல்லிக் கொடுத்தல்
13. நிறுத்தற் குறிகளின் அவசியத்தை விளக்குதல்
14. மொழிமுதல்மற்றும்இறுதிஎழுத்துகளை அறியச் செய்தல்
15. மெய்ம்மயக்கங்களை அறியச் செய்தல்
16. மரபுச்சொற்களை அறியச் செய்தல்
17. மயங்கொலி எழுத்துகளை அறியச் செய்தல்
18. வழக்குச்சொற்களின் திருத்தங்களை அறியச்செய்தல்
19. அடிப்படை இலக்கணம் அறியச் செய்தல்
20. இன எழுத்துகளைச் சொல்லிக் கொடுத்தல்
21. உச்சரித்தபடி எழுதப் பயிற்சி அளித்தல்

**எழுத்துப் பயிற்சியளித்தலினால் ஏற்படும் நன்மைகள்**

எழுத்துப்பயிற்சி அளிப்பதன் மூலம்,

1. எழுத்துகளின் வடிவம் தெளிவாக எழுதப்படுகிறது.
2. எழுத்துப்பிழை தவிர்க்கப்படுகிறது.
3. திரும்பத் திரும்ப எழுதுவதால் மனனம் ஆகிறது.
4. எழுத்துகளைப் பிரித்து எழுதுவது தவிர்க்கப்படுகிறது. (கொ என்று எழுதும் போது கெ ஒரு வரியிலும் பின்கால் அடுத்த வரியிலும் எழுதுவது தவிர்க்கப்படுகிறது. மற்றும் கெ எழுதி விட்டு சிறிது தள்ளி பின்கால் எழுதுவதும் தவறு.)
5. எழுத்துகளை எழுதும்போது ஓர் எழுத்தோடு மற்றோர் எழுத்து எழுது வது தவிர்க்கப்படுகிறது. (வறண்ட என்னும் சொல்லை எழுதும்போது சிலர் ஹண்ட என எழுதுவர். வ, ற என்ற இரு எழுத்துகளும் சேர்ந்து ஹ என்னும் எழுத்தாக மாறுகிறது. உ, ற என்னும் எழுத்துகளைச் சேர்த்து எழுதினாலும் ஹ எனத் தோன்றும்)
6. காகம் என்பதை கரகம் என எழுதினால் பொருள் மாறுபடும் என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகிறது. (எக - கெ, னக - கை, கா - கர போன்ற எழுத்துகளை எழுதுவதில் கவனம் செலுத்தப்படுகிறது)
7. ஐந்து என்பதை ஜந்து என எழுதும் போது பொருள் மாறுபடுவதை உணர்ந்து கொள்ள முடிகிறது. (ஐந்து - எண்ணைக் குறிக்கும், ஜந்து - உயிர்களைக் குறிக்கும்)
8. அ,இ,று,ல,டு என்னும் எழுத்துகளைத் தெளிவாக எழுதவில்லையெனில் முறையே சு, கி, னு, வ, கு எனத் தோன்றுவது தவிர்க்கப்படுகிறது.
9. இனஎழுத்துகளைத் தெளிவாக அறிவதால் பிழையில்லாமல் எழுத முடிகிறது.
10. டகற, றகர மெய்களின் ( ட், ற்) அருகில் ஒற்றெழுத்து மிகுந்து வராது என்பதைத் தெளிவாக அறிய முடிகிறது. (எ.கா) காட்சி , பயிற்சி
11. இரண்டு வல்லின மெய்கள் இணைந்து வராது என்பதை அறிய முடிகிறது.
12. உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களுக்கு முன் ஓர் என்று எழுதவேண்டும் என்பதை அறியமுடிகிறது. (ஓர் ஊரில் ஓர் அரசன் வாழ்ந்தான்)
13. உயிர் வரின் அது, இது, எது முறையே அஃ து, இஃ து, எ ஃ து என்று மாறுவதை அறிய முடிகிறது .

14. மொழி முதல், இறுதி எழுத்துகளை அறிய முடிகிறது.
15. வல்லினம் மிகும், மிகா இடங்களைத் தெளிவாக அறிய முடிகிறது. (தேரைப் பார்த்தான். தேரை பார்த்தான்)
16. இடைச்சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள்ஆகியவற்றைத்தொடர்களில், சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுது வதால் ஏற்படும் பொருள் வேறுபாடு களை அறியமுடிகிறது. (மாலா தான் பார்த்ததாகக் கூறினாள். மாலாதான் பார்த்ததாகக் கூறினாள்)
17. நிறுத்தல் குறிகளைச் சரியாக இடவில்லையெனில் பொருள் வேறுபடும் என்பதை அறியமுடிகிறது. (அவன், அண்ணன் வீட்டிற்குச் சென்றான். அவன் அண்ணன், வீட்டிற்குச் சென்றான்)
18. ஒரு தொடரில் உள்ள சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் எழுதும்போது பொருள் கெடும் என்பதை அறிய முடிகிறது.(ஐந்து மாடி வீடு. ஐந்துமாடி வீடு)
19. எழுதும்போது சொல்லிலுள்ள ஓர் எழுத்தை விட்டு எழுதினால் பொருள் மாறிவிடும் என்பதை அறியமுடிகிறது. (மந்திரிகள் என்னும் சொல்லில் ரி யை விட்டு எழுதினால் மந்திகள் எனப் பொருள்படும் )

## முடிவுரை

வாய்மொழிப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் அளிப்பதோடு, பிழையில்லாத நூல்களைப் படிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். “பிழைகளை நீக்குவது கல்விக்கு அழகு’ என்பதை உணரச் செய்யவேண்டும். பிழை உண் டாகும் சொற்களை மீண்டும் மீண்டும் ஒலிக்கச் செய்து பயிற்சியளிக்க வேண்டும். எழுதி முடித்ததும் மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்துப் பிழைகளைச் சரிசெய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தமிழ் மொழியைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் முடியும்.

## பார்வை நூல்கள்

1. கோவிந்தராசன், மு. (1993). *நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும்*, சென்னை, சரஸ்வதி பதிப்பகம்.
2. இளங்குமரனார், இரா. (2004). *பிழை இல்லாமல் எழுதுவோம்*, சென்னை, மாணவர் பதிப்பகம்.